தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சஅ	திருவள்ளுவர் யாண்டு உ௦௦௫ ஆனந்த, கார்த்திகை (1974 — நவம்பர் — டிசம்பர்)	மலர் அ

"தமிழச்சியின் கத்தி" யில் உவமை நயமும் கதையமைப்பும்

S. ஆரோக்கியநாதன், எம். ஏ.,
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர் — 6.

"முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை"

எனும் ஒப்புயர்வற்ற கொள்கையினை நிலைநாட்ட எழுந்த காவியம் பாரதிதாசனின் "தமிழச்சியின் கத்தி" யாகும். புதுவையை அடுத்த வளவனூரில் வாழ்ந்த தமிழ்த் தம்பதியின் காவியமான இந்நூலில், புதுவைக் குயில் தனக்குள்ள இயற்கை ஈடுபாட்டின் தனித்துவத்தால் கவிதைகளிடையே சிறப்பான உவமை முத்துக்களைப் பதித்துவைத்துள்ளார். அவ் உவமை முத்துக்களின் சிறப்பினை உணர்வதும் இந் நூலின் கதையமைப்பினை ஆய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"பூச்சூடி மண்ணிற் புறப்பட்ட பெண்ணழகு"

என விளங்கும் திம்மனின் மனைவியைக் கண்டவுடன் ஆசை கொள்ளுகிறான் சுபேதார் சுதரிசனன் என்பவன். திம்மனின் மனைவி சுப்பம்மாவும் சுதர்சனனும் தனிமையில் சற்று நேரம் இருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்போது சுதரிசனன் விரகதாபத்தால் துடிக்கின்ற நிலையைக் கவிஞர்.

"முதிராத பழத்துக்குக் காத்திருந்து
முதிர்ந்தவுடன் சிறகடிக்கும் பறவையைப்போல்"

எனக்கூறி நயமான உவமையால் அழகாக விளங்கவைக்கிருர். சுப்பம்மா 'தேனையொத்த சுதர்சனனின்' துடுக்குத்தனத்தைப் புரிந்துகொண்டு விலகிச் செல்லும்போது,

''வெண்ணெய் என்ற பிள்ளைக்கு மண்ணையள்ளி
உண்ணென்று தந்ததுபோல்''

சுதரிசனனின் நிலையிருந்தது எனக் காட்டும்போது கவிஞர்தம் உவமைத் திறத்தினைப் பாராட்டாதிருக்க முடியவில்லை. சிப்பாய் வேலை வாங்கித் தருவதாகச் சுதரிசனன் 'வெள்ளைமனத் திம்மனி'டம் கூற, உடனே திம்மன்,

'பொம்மை வரும் என்றதும்—குழந்தை
பூரித்துப் போவதைப்போல்''

மகிழ்ந்தான் எனக் கவிஞர் அற்புதமாக விளக்கினுர்.

சிப்பாய் வேலைக்காகக் கோட்டைக்குச் சென்று விட்ட கணவன், வரக் காணுது சுப்பம்மா சோர்வுற்று உடல் மெலிந்து கண்கள் குழிவிழுந்திருக்கக் கண்ணீர் விடும்போது

''ஓட்டையிலே ஒழுகுவது போலநீரை
ஒழுகவிடும் இருவிழியும்''

எனப் பாரதிதாசன் கூறி: உவமை நயத்தோடு அவலச் சுவையினை அள்ளித் தருகிருர் பின்னர் ஓரிடத்தில். படைவீட்டில் சுப்பம்மா தேசிங்கு மன்னனை சந்தித்து, சுபேதார் சுதரிசனனின் சூழ்ச்சியினைக் கூறுகிருள். மன்னனே, சுப்பம்மாவை அலட்சியம் செய்து அனுப்பிவிடுகிருன். பிரிந்து சென்ற கணவனையும் காணமுடியாது. தேசிங்கு மன்னனிடமும் நீதி பெறமுடியாது. சுதரிசனனின் சூழ்ச்சிச் சூழலில் சிக்கித் தவிக்கின்ற சுப்பம்மாவை,

''மிதக்கின்ற பாய்க்கப்பல் மூழ்கிப்போகப்
பெறுங்கட்டை அதுவுங்கை விட்டதைப்போல்
கொதிக்கின்ற மனத்தோடு கோட்டைக்குள்ளே
குந்தினுள் கண்ணீரைச் சிந்தினுளே''

எனக் கவிஞர் சித்திரிக்கும்போது, நாமும் 'சிந்தாத கண்ணீரைச் சிந்தி' நம் அநுதாபத்தை வெளியிடவேண்டியுள்ளது இருட்டில் தெரிகின்ற மாட்டு வண்டியின் விளக்கு வெளிச்சத்தை எலியின் கண்ணிற்கு ஒப்பிடுவதும், சிப்பாய் அணிந்திருக்கும் நீண்ட

கத்தியினைச் 'செந்தாழை மடல் போன்ற கத்தி' எனக் கூறுவதும் நயமிக்க புதுக் கவிதை உவமைகளாகும்.

திம்மன் வீட்டில் விருந்தினனாகத் தங்கும்போது குப்பம்மாவின் அழகில் மயங்கிவிட்ட சுதரிசனன், அவள் அழகைத் தன் கண்களுக்கு விருந்தாக்கி, மனத்தில் மோகம் கொண்டுவிடுகிறான். பிறகு புறப்படும் வேளையில் திம்மனிடம்.

"விருந்தாக்கிப் போட்ட உன்னை மறக்கமாட்டேன்"

என இரு பொருள்படச் சுதரிசனன் கூறுவதாகக் கவிஞர் அமைத்துள்ளது சிறப்பாக உள்ளது.

திம்மன் இரண்டு நாள் மட்டுமே சிப்பாய் உடையணிந்திருக்கிறான். அதற்குள் நிகழ்ச்சிகள் வேறு வகையில் செல்ல, அந்த சிப்பாய் உடையோடு உயிரிழக்க நேருகிறது. முதன் முதலில் சிப்பாய் உடையைத் திம்மனுக்கு அணிவித்து. சுதரிசனன்,

'போட்ட தலைப்பாகை — கழற்றிடப்
போவதில்லை நீதான்.
மாட்டிய சட்டையினைக் — கழற்றியும்
வைத்திடப் போவதில்லை"

என்று கூறுமிடத்தில், நம்மால் கவிஞரின் தீர்க்கதரிசனமான சொல்லாட்சித் திறத்தினை — அதன் நயத்தினை எண்ணி வியந்திடாமல் இருக்கமுடியவில்லை.

1949ஆம் ஆண்டு வெளிவந்த ' தமிழச்சியின் கத்தி " யின் கதை நிகழ்ச்சிகள் பெரும்பாலும் செஞ்சியில் நடப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. கதைச் சுருக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்திலிருந்து 'டில்லியில் பாதுஷா செங்கோல் செலுத்தினான். ஆர்க்காட்டுப் பகுதி அவன் ஆணைக்கு உட்பட்டிருக்கிறது ஆர்க்காட்டின் அதிகாரி நவாப். ஆர்க்காடு 172 பாளையப்பட்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. செஞ்சிப் பாளையப்பட்டு; தேசிங்கு: வடக்கன்; தமிழரை இகழ்பவன்" என அறிகிறோம் இதிலிருந்து கதை நிகழ்ச்சிகள் செஞ்சியை ஆண்ட தேசிங்கு மன்னனது காலகட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது எனும் சரித்திரப் பின்னணியை நாம் உணரலாம் முன்னுரையிலே கவிஞர், தேசிங்கு மன்னனை, வடக்கன், தமிழன் இகழ்பவன்' என்றும் கதையோட்டத்தின் நடுவில்,

"தேசிங்கு வடக்கிலிருந்து தென்னாடு போந்தவன்
தமிழரை இகழும் தன்மை வாய்ந்தவன்"

என்றும்,

"..................... தேசிங்கு தமிழர்களின்
மெய்யுரிமை தீண்டினன்"

என்றும்,

"தேனென அஞ்சுகின்றார், செஞ்சியின்
தேசிங்கின் பேருரைத்தால்"

என்றும் குறிப்பிடுகின்றார் இந்நூலின் முன்னுரையில் கவிஞர். "இதற்கு முன் தன் படை வலியுடன் அண்டிய ஒரு செஞ்சி அதிகாரியை எதிர்த்த தமிழச்சியின் கத்தி எழுதப்பட்டது" எனக் குறிப்பிடுகின்றார். இதனால், செஞ்சியின் அதிகாரிகள் தமிழர்களுக்குத் தமிழ்ப் பெண்களுக்கு இன்னல் விளைத்து வந்தனர் எனும் கருத்து கவிஞரின் மனதில் இருந்து வந்திருக்கிறது என்று ஊகிக்கமுடிகிறது. அக் கருத்தே கருவாகி இந் நூலின்விளைவுக்கு வித்தானது என்றுகூட நாம்கூறலாம். தேசிங்கு மன்னன், டெல்லி துருக்கரின் குதிரையினை அடக்கிய வீரத்தை யும். அவன் ஆட்சிச் சிறப்பினையும் புகழ்ந்துதான் நம்மிடையே பன்னெடுங் காலமாக நாடோடிப் பாடல்கள் இருந்துவரு கின்றன. கவிஞர், தம்முடைய இந்நூலில் மட்டும். தேசிங்கு மன்னனைத் தமிழின் - தமிழரின் எதிரியாகப் படம் பிடித்துக் காட்டுவது ஏன்? முரண்பாடு மிகுந்த கவிஞரின் இத்தகைய கருத்துக்கு சரித்திரச் சான்று இருப்பதாகவும் தெரியவில்லை. கவிஞர் கூறுவதுபோல. தேசிங்கும் அவன் அதிகாரிகளும் இழி குணம் உடையவர்களாகவே இருந்திருந்தால், இன்று தமிழகத் தில் எவ்வாறு அவர்களின் பெருமைகளைக் கூறும் நாடோடிப் பாடல்கள் நிலவிடக்கூடும் என்பது விவாதத்திற்குரியதாகும். தேசிங்கு மன்னன்மீது கவிஞர் ஏன் அத்தகைய எதிர்ப்புக் காட்டுகிறார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

கவிஞர் காட்டும் சுப்பம்மாவும் திம்மனும் சராசரி தமிழ்க் குடும்பத்தின் பிரதிநிதிகளாக உள்ளனர். 'மாடு கறந்து பால் வழங்கி. ஆடு சமைத்து அருத்தி' இல்விருந்தோம்பும் இனிய பண்பினனாக — 'வெள்ளை மனத் திம்மனை'யும், 'எம் மனிதனையும் ஈன்ற பிள்ளையாய்க் கொள்ளும் உள்ளம் - தாயுள்ளம் - கொண்டு கணவனது கட்டளைக்குக் கீச்சென்று பேசாக் கிளியாகச் சுப்பம்மாவையும் கவிஞர் படைத்துள்ளார். இந்நூலில்

சுப்பம்மாவின் பாத்திரப் படைப்பு மேலுயர்ந்து நின்று, பாரதி வேண்டிய 'புதுமைப் பெண்'ணின் 'இலக்கண வார்ப்பாக விளங்குகிறது. ஆனால், கதையோட்டத்தில் உள்ள சில குறை பாடுகள் பாத்திரங்களின் சிறப்பினை லேசாக பாதித்துவிடு கின்றன முதல் சந்திப்பிலேயே சுப்பம்மாவிடம் ஆசைகொண்ட சுபேதார் சுதரிசனன், அவளை அடைவதற்கான வாய்ப்பிற்காகத் தவிக்கிறான் அதற்காக, குதிரையைப் பார்த்துவரச்சொல்லித் திம்மனை அனுப்பிவிட்டு சுபேதார் சுப்பம்மாவிடம் பேச்சுக் கொடுத்திட, சுப்பம்மாவே வெடுக்கெனப் பேசி அவனைத் தவிர்த்துக்கொண்டு, போய்விடுகிறாள் சுபேதாரின் தீய மனதை சுப்பம்மா நன்றாக அறிந்துகொள்கிறாள். திம்மனோ ஒரு கவடமில்லான்' — அவனோ சுபேதாரை நல்லவனாகக் கருதி அவனிடம் நட்புக் கொள்கிறான். திம்மன் சுபேதாரைப்பற்றிப் பெருமையாகப் பேசும்போது சுப்பம்மா,

> ''என்ன இருந்தாலும் சுபேதாரை — நான்
> என் வரைக்கும் நம்பமுடியாது''

எனக் கூறுகிறாள். இவ்வாறிருக்க, அடுத்த நாள் காலையில் சுபேதார் 'வீட்டெதிரே சாணமிடும் சுப்பம்மா அண்டையில் நின்றான்'. திம்மனோ உள்ளே உறங்குகின்றான். இந்நிலையில்,

> ' வரவேற்றாள் அன்னவனைக்
> கண்ட இனிய கற்கண்டு''

என்று சுப்பம்மா அவனை வரவேற்பதாகவே, கவிஞர் காட்டுவது அத்துணை சிறப்பாக இல்லை.

முருகி, குப்பு என்ற இரு பெண்களும் சுதர்சனனின் கூத்தி மார்கள் - கையாட்கள் அவர்களின் பாதுகாப்பில் - குடிசையில் சுப்பம்மா தனியே இருக்க நேரிடுகிறது.

'அகம் கெட்ட மாதர்' இருவரையும் சுப்பம்மா நன்றாக இனம் கண்டுகொள்கிறாள், சுதரிசனனும் சுப்பம்மாவை அடைய முயற்சிசெய்து தோல்வியடைந்து நிற்க, சுப்பம்மா எப்போதும் விழிப்புணர்ச்சியுடன் இருந்துவருகிறாள். இவ்வாறிருக்க, ஓர் நாள் இரவு. சுதரிசனன் சூழ்ச்சியால் சுப்பம்மா இருந்த குடிசையை ஆட்கள் பலர் சூழ்ந்தார்கள். உயிர் கொன்று பொருள்களைக் கொள்ளையடிப்போர் குரலிது' எனப் பொய்யுரை கூறி, உடனிருந்த குப்பும், முருகியும் விளக்கை அணைத்துவிட்டுக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் ஓடிவருகின்றனர், இந்

நிலையில் குப்பம்மா மட்டும் தனியே அவ்விருட்டில் குடிசையில் இருப்பதாகக் கவிஞர் காட்டுகிருர். அடுத்துவரும் கதையோட்டத்தை மனதில் கருதி இவ்வாறு அமைக்கப்பட்டிருப்பினும், குப்பம்மாவின் பாத்திரப் படைப்புக்கு இந்நிகழ்ச்சி சற்றும் பொருந்தாததாக உள்ளது.

தேசிங்கு மன்னனைப் பழிக்குப் பழி வாங்கிவிட்டு, தங்களது ஆவியினை முடித்துக்கொள்ளத் திம்மனும், சுப்பம்மாவும் முடிவு செய்கின்றனர். அவன் வரவுக்காக ஆலமரத்தின்மேல் ஒளிந்து கொண்டிருக்கின்றனர், இந்நிலையில் திம்மன்,

''பாட்டொன்று பாடு! பழைய மறவர் திறம்
கேட்டுப் பலநாட்கள் ஆயினவே கிள்ளையே''

எனக் கேட்க சுப்பம்மா சாவினை முன்னிறுத்தி,

''சாவே! எனைத்தழுவ வாராயோ''

எனப் பாடுவதும், அதனைத் தொடர்ந்து திம்மனும்.

''சாவே! எனைத் தழுவே''

எனப் பாடுவதும் அபத்தமாக உள்ளது.

குப்பம்மா, படைவீட்டிலிருக்கும் தேசிங்கு மன்னனைச் சந்திக்கிருள். திம்மனும் தேசிங்கு மன்னனோடு உரையாடும் வாய்ப்பினைப் பெறுகிருன் அதற்குப் பின்னர், தேசிங்கு மன்னனைப் பழிவாங்கக் காத்திருக்கும் குப்பம்மாவும் திம்மனும் வேறொரு அதிகாரியை தேசிங்கு மன்னன் மாறு வேடத்தில் வந்திருப்பதாகக் கருதி, எதிர்க்கிருர்கள். தேசிங்கு மன்னனை வடக்கன், தமிழரின் எதிரி எனக் கூறி, பின்னர், திம்மன் முன்னலேயே, தேசிங்கு மன்னன் குப்பம்மாவை 'கூத்தி' எனக் கேவலமாகப் பேசி அலட்சியம் செய்கின்றதாகவும் காட்டுகின்ற கவிஞர், பின் குப்பம்மாவும் திம்மனும் பழிவாங்க நினைக்கின்ற நிலையில், சரித்திர பின்னணியில் எழுந்த கதைப்போக்கு இது என்பதால் தேசிங்கு மன்னனை வலிய காப்பாற்ற நினைத்து, வேறொரு அதிகாரியை இவர்கள் பழிதீர்த்துவிடுவதாகக் கதையை அமைத்துச் செல்வது. கதையின் சிறப்பை - வலுவினைக் குன்றச் செய்துவிடுகிறது.

நல்ல வலுவான கதையமைப்பு இல்லாத போதும், சிறப்பான கவிதை இழையால், உயர்வான உவமை முத்துக்களைக் கொண்டு புரட்சிக் குயில் பாரதிதாசனல் புனையப்பட்ட ஒப்புயர்வற்ற ஓர் காவியம் ''தமிழச்சியின் கத்தி'' என்று துணிந்து கூறலாம்.

எது இலக்கியம்?

பேராசிரியர் சண்முகானந்தம், எம். ஏ.,
முதல்வர்
கனகசபைப் பிள்ளை தமிழ்க் கல்லூரி, நாகப்பட்டினம்

இலக்கியம் சுவையானது. படிப்பவர்க்கு இன்பம் தர வல்லது. உணர்வைத் தூண்டும் ஆற்றலுடையது. ஆனால், எது இலக்கியம் என்ற ஆராய்ச்சி அத்தகைய சுவையினையும் இன்பத்தையும் தரக்கூடியது அன்று. எது இலக்கியம்? என்ற வினாவிற்கு வரக்கூடிய விடை இலக்கியம் பற்றிய இலக்கணமாக அமையும் இலக்கணம் இலக்கியத்தைப் போலவே அனைவர்க்கும் சுவை தருவது அன்று.

மேலும், எது இலக்கியம் என்ற ஆய்வு இலக்கியத்தைச் சுவைப்பதற்கு அவசியமும் இல்லை. மின்சாரம் எவ்வாறு உற்பத்தி ஆகின்றதென்ற விவரம் மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்க்குத் தெரிந்திருக்கவேண்டுமென்ற இன்றியமையாமை இல்லை.

மின் உற்பத்தி பற்றிய அறியாமை அதைப் பயன்படுத்துவதற்கு எவ்வாறு தடையாக இல்லையோ அதுபோன்றே இலக்கியத்தைச் சுவைப்பதற்கும் இலக்கியம் பற்றிய இலக்கணத்தின் அறியாமை தடையாக இல்லை.

ஆனால், மின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழில் நுட்ப வல்லுநர்க்கு மின்னியல்பற்றிய எல்லா அறிவும் இன்றியமையாதது. இன்றேல் புதிய புதிய மின் உற்பத்தி நிலையங்களைத் தோற்றுவிப்பது எங்ஙனம்?

எனவே இலக்கியப் படைப்பாளிகட்கு இலக்கீயம் பற்றிய இலக்கண அறிவு மிகவும் தேவையாகும்.

உண்ணத் தெரிந்த அத்தனை பேருக்கும் உழவுத் தொழில் தெரியாது எனினும் உணவுத் தொழில் பற்றிய அறிவு மற்றவர்க்கும் இருப்பது உழவுத் தொழிலின் உயர்வைப் புரிந்து கொள்ள உதவும்.

இலக்கியச் சுவைஞர்கட்கு இலக்கியம் பற்றிய இலக்கண அறிவு இருக்குமானால் சுவைஞர்களிடையே படைப்பாளியின் மதிப்பு உயர்வதோடு தரமான இலக்கியம் தோன்ற அது ஒரு பாதுகாப்புமாகும்.

ஆகவே, எது இலக்கியம் என்ற ஆய்வு புதிய இலக்கியங்களையும் தோற்றுவிக்கும் முயற்சிக்கு ஒரு துணையாகும்.

சொற்பொருள் உதவுமா?

'இலக்கியம்'—என்ற சொல் சிறிது படித்தவர்கட்கும் அறிமுகமான எளிய சொல்லாயினும் அதற்குப் பொருள் சொல்வது அவ்வளவு எளிதானது அன்று.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' —என்பது தொல்காப்பியம் ஆயினும் ''சொல்'' என்பது பொருளின் குறியீடே தவிர பொருளின் விளக்கமன்று என்கிறார்கள் இன்றைய மொழி இயலார். 'மரம்' என்ற சொல்லுக்கும் 'மரம்' என்று சுட்டப்படுகின்ற இலையும், கிளையும், காயும், கனியும் உடைய மரம் என்ற அந்தப் பொருளுக்கும் எந்தத் தொடர்புமில்லை. ம ர ம் என்ற மூன்று எழுத்துக்கள் மரத்திற்கு எத்தகைய விளக்கத்தையும் தருவதில்லை. மரம் என்ற அந்தப் பொருள் 'இலை' என்று முன்னோர் வழங்கி இருந்திருப்பார்களானால் நாமும் அவ்வாறே அதனை அழைத்துக்கொண்டிருப்போம். எனவேதான் ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்று எழுதிய அதே தொல்காப்பியர் ''மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'' என்றும் கூறிச் சென்றார்.

அதுபோன்றே இலக்கியம் என்ற சொல்லும் அது தன்னுள் அடக்கியிருக்கும் முழுப் பொருளையும் விளக்கி நிற்கவில்லை

இலக்கியம் என்ற சொல்லை இலக்கு + இயம் எனப் பிரித்து இலக்கினை உடையது—குறிக்கோளை இயம்புவது எனப் பலரும் விளக்கம் சொல்கிறார்கள்.

இலக்கியத்திற்கு ஒரு குறிக்கோள் அவசியமே. அதை மறுப்பதற்கு இல்லை.

''அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்''

ஆகிய மூன்று குறிக்கோள்களைக்கொண்டே சிலம்பு தோன்றியது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது எவ்வாறு என்பதை வரையறுத்துக் கூறும் நோக்கு உடையதே திருக்குறள்.

பிறன்மனை நோக்காத பேராண்மை'யை உலகுக்கு உணர்த்தும் குறிக்கோளுடன் தோன்றியதே கம்பராமாயணம்.

—என்பனவெல்லாம் மெய்யே ஆனால், ஒரு உயர்ந்த குறிக்கோளைச் சாதாரணமாக வெளியிட்டுவிடுவதாலேயே இலக்கியம் பிறந்துவிடுவதில்லை

''கள் குடிப்பது தீமை''—என்று நாம் எழுதினால் அதை ஒரு அறக்கருத்து என்று ஏற்றுக்கொள்வார்களேயன்றி அந்த வரியில் இலக்கியப் பண்பு இருப்பதாக யாரும் ஏற்பதில்லை

நஞ்சுண்பவர்கள் உடனே சாகின்றார்கள். கள்ளுண்பவர்கள் அவ்வாறு உடனே சாவதில்லை ஆயினும் அவர்களது உடல் விரைவில் கெட்டு ஒழிவது உறுதி. ஆகவே, புறத்தோற்றத்தில் சாகாமல் இருப்பதாய்த் தோன்றினாலும் அவர்களது சீவன் விரைவாக அழிந்துகொண்டிருக்கிறது என்பது மெய் தூங்குபவர் செத்தவரைப் போலவே செயலற்று இருக்கிறார்கள் ஆனால், அவர்கள் பிணமல்ல இருப்பினும் பின்னால் பிணமாகப் போவதற்கு ஒவ்வொரு தூக்கமும் ஒரு ஒத்திகை. அதுபோலக் கள்ளுண்பவர் குடிபோதையில் பிரக்ஞையின்றி இருப்பார்கள் தற்காலிகமாகப் பிரக்ஞையற்றிருக்கும் அந்த நிலை இருக்கிறதே அதுவும் அவர்கள் விரைவில் பிரக்ஞை திரும்பாமலே போகப்போகிறார்கள் என்பதற்கு ஒரு ஒத்திகை தான் என்ற நயந்தோன்ற

''துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்''

—என்று எழுதினால்தான் அது இலக்கியமாகிறது.

வடிவமைதி அவசியம்!

ஆகவே சீரிய கருத்தை அல்லது குறிக்கோளைச் சொல்லி விடுவதினாலேயே அது இலக்கியமாகிவிடுவதில்லை. சொல்லுகின்ற முறையிலேயே அதற்கு இலக்கிய வடிவம் அமைகிறது.

எனவே குறிக்கோளை இயம்புவது என்ற சொற்பொருள் ஒரு இலக்கணமாக முழுமை அடையவில்லை.

''இலட்சியம்'' என்ற வடமொழிச் சொல்லில் இருந்து இலக்கியம் என்ற தமிழ்ச்சொல் ஆக்கப்பட்டதாகவும் சிலர் கூறுவர். பக்ஷணம் - பக்கணம், தட்சிணம் - தக்கணம் என்ருவதுபோல இலட்சியம் - இலக்கியம் என்றும் இலட்சணம் - இலக்கணம் என்றும் உருவாயிற்று என நிறுவுவர். இந்தச் சொல்லாராய்ச்சி எது இலக்கியம் என்ற கேள்விக்கு விடை

காண அவ்வளவாகத் துணை நிற்பதில்லை. ஆகவே நாம் அதில் சிக்கிக்கொள்ள வேண்டுவதில்லை.

ஆனால் இலக்கியம் என்ற சொல் மிகப் பழைய தமிழ் நூல்களில் இல்லை. மிகப் பழைய காலத்தில் 'நூல்' என்ற சொல்லாலேயே இலக்கியம் என்ற சொல் இன்று தாங்கி நிற்கும் கருத்து கூறப்பட்டிருக்கிறது

பன்னூற் கருத்துக்கள் :

தச்சன் பயன்படுத்தும் நூல் மரத்தின் கோணலைக் கண்டு அதனை நேர்செய்யப் பயன்படுவதுபோல மனக்கோட்டம் தீர்ப்பது நூல் என்ற நன்னூலாசிரியர் பவணந்தியார் தந்த விளக்கம் இலக்கியத்திற்கும் பெருமளவு பொருந்தும் ஆயினும் வாழ்க்கையை விமர்சிப்பதோடு நிறுத்திக்கொள்ளும் சிலவகை புதினங்கட்கு இவ்வரையறை பொருந்தாமல் போகிறது,

எது இலக்கியம் என்ற கேள்விக்கு விடை இறுப்பதுபோல ஒரு கம்பராமாயணப் பாடல அமைந்து இருக்கிறது.

> "புவியினுக் கணியாஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
> அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி
> கவியுறத் தெளிந்து தண்ணென்று ஒழுக்கமுந் தழுவிச் சான்றோர்
> கவியெனக் கிடந்தகோத வரியினை வீரர்கண்டார்"

என்பது அந்தப் பாட்டு.

புவிக்கே அணிகலனும் என்று சொல்லுமளவுக்குப் புகழ்மை பொருட்செறிவு அகம் புறம் என்ற பிரிவுகளால் பல்வேறு துறைகளையும் தழுவி நிற்குந் தன்மை, தெளிவு, ஓட்டம் ஆகிய இத்தனையும் சான்றோர் கவிக்கான இலக்கணங்களாகும் என்பது கம்பன் கருத்து.

இப்பாட்டு கவிதை இலக்கியத்திற்கே உரிய இலக்கணம் எனக் கம்பனே எடுத்து மொழிந்துவிட்ட பிறகு இற்றைநாள் உரைநடை இலக்கியங்கட்கு இவ்வரையறை பொருந்தவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கவேண்டுவது இல்லை,

மேலும் ஒரு இலக்கியம் பல்வேறு துறைகளையும் பேசியாக வேண்டுமென்ற அவசியமுமில்லை. ஒரு துறையைப்பற்றிமட்டும் அழகாகக் கூறிச் சிறப்பு அடையும் இலக்கியமும் உண்டு. பல

துறையையும் எடுத்துப் பேசி இலக்கியச் சிறப்பை இழந்தும் நிற்கலாம். ஆகவே கம்பனது இக் கவிதையை இலக்கியத்திற்கான இலக்கணமாகக் கொள்ள இயலாது

வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர் நூல் என்பதற்கு ஒரு தகுதியைச் சொன்னூர்.

நல்லவர் நட்புக்கு உவமை சொல்லும் இடத்தில் இக்கருத்து சிந்திக்கிடக்கிறது.

பழகுந்தோறும் நயம் பயப்பது நல்லவர் நட்பு படிக்குந்தோறும் புத்தம் புது நயம் தருவது நல்ல நூல் என்பது வள்ளுவர் கருத்து.

நயம் என்பது ஒரு நூலின் வடிவழகைப் பற்றியது. பொருந்தாத கருத்தைக்கூட நயந்தோன்றச் சொல்லும் ஆற்றல் இலக்கிய ஆசிரியர்கட்கு உண்டு. அதுமட்டுமின்றிக் குறிப்பிட்டத் துறையைச் சார்ந்தவர்கட்கு அவ்வத்துறை நயம் பயப்பனவே. மேலும், வள்ளுவப் பெருந்தகை உவமைக்காகச் சொல்லிச் சென்ற ஒன்றில் நமக்குத் தேவையானவை அத்தனையும் இருப்பதாகத் தேடி அலுத்துக்கொள்ளவேண்டுவதில்லை.

அவ்வாறுயின் எது இலக்கியம்?

மேனுட்டார் கருத்து

மேனுட்டு ஆசிரியரின் கருத்துக்களைப் பலரும் மேற்கோள் காட்டிப் பேசுவதை நாம் அடிக்கடி கேட்டு மகிழ்கிறேம்,

"Literature is the record of best thoughts"—என்ற தொடர் அடிக்கடி இலக்கிய மேடைகளில் அடிபடுகிறது.

சிறந்த சிந்தனையின்றி எந்த இலக்கியத்தையும் ஆக்க இயலாது என்பது மெய்யே. திருக்குறள் திருவள்ளுவரின் சிறந்த சிந்தனைகளின் பதிவுதான. திருவருட்பா வள்ளலாரின் சிறப்பான சிந்தனைகளின் பதிவுதான். ஆனல் ஒரு நாட்டின் அரசியல் சட்டங்களும் சிறந்த சிந்தனைகளின் பதிவுகள்தாமே அவை இலக்கியங்களாகுமோ? பஞ்சாங்கம்கூட சிறந்த சிந்தனைகளின் பதிவேடுகள் தாமே. இவற்றிற்கு என்ன பதில் தருவது?

"Literature is the mirror of life" என்ற கருத்தும் அடிக்கடி பேசப்படுகிறது. இது இலக்கியத்தைப்பற்றிய அழகான

வர்ணனையே. இலக்கியத்தைப்பற்றிய இலக்கணத்தோடு பெருமளவு ஒன்றிவரும் தொடர் இது. சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழர் தம அகவாழ்வையும் புறவாழ்வையும் பிரதிபலிக்கும் கண்ணாடிதான் சிலம்பும் மேகலையும் நதிக்கரை நாகரிகத்தின் சிறந்த கண்ணாடிகளே.

ஆனால் எத்தகைய சமூக உணர்வுமின்றி (Social Concious-ness) வாழ்க்கையை நிழற்படம் எடுப்பதுபோலப் பிரதிபலிப்பது மட்டுமே இலக்கியத்தின் பணியன்று; எப்படி இருக்கிறதோ அதைச் சொல்வது மட்டும் இலக்கியத்தின் பணி ஆகாது. ஓர் இலக்கிய ஆசிரியரின் கடமை அவ்வளவு எளிதாக நிறைவேறி விட இயலாது. எப்படி இருக்கவேண்டுமோ அதனையும் இலை மறை காய்போலக் குறிப்பாக உணர்த்தும் கடமை இலக்கியத்திற்கு உண்டு. இந்தக் கோணத்திலிருந்து நோக்குகிறபோது இலக்கியம் வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்ற இலக்கணமும் முழுமை அற்றதாகவே தோன்றுகிறது,

படிப்பவர்க்குச் சுவையும், பயனும் தருவது இலக்கியம் என்பர் சிலர் இலக்கியம் அதனைப் படிப்பவர்க்குச் சுவையினையும் பயனையும் தருவது மெய்யே. ஆனால் இதனை விதிமுகத்தான் கூற இயலாது, ஏனெனில், சுவை தருவன எல்லாம் இலக்கியங்கள் என்றால் துப்பறியும் நாவல்களும் உடலுறவு பற்றிய அரைவேக்காட்டுப் பாலியல் நூல்களும் பேரிலக்கியங்கள் என்ற பெருமைக்குரியவையாகிவிடும். நாளிதழ்கள் கூட அத்தகைய மரியாதைக்குரியனவோ என்ற ஐயம் எழும்.

இலக்கியங்கள் பயனுடைய நூல்களே. ஆனால் பயனுடைய நூல்களெல்லாம் இலக்கியங்களல்ல,

இரயில் கால அட்டவணை மிகவும் பயன் உடையதுதான். அதனை நோக்கக் குற்றாலக் குறவஞ்சி மிகவும் பயனற்ற நூலே. ஆனால் குற்றாலக் குறவஞ்சி இலக்கியம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் இரயில்கால அட்டவணையை இலக்கியம் என யாரும் ஏற்கவும் மாட்டார்கள்.

அப்படியானால் எது இலக்கியம்?

களஞ்சியக் கருத்து

அறிவுக் களஞ்சியமாகிய தமிழ்க் கலைக்களஞ்சியம் இதற்கு விடை சொல்ல முயல்கிறது,

ஒருவன் தன்னுடைய அனுபவத்தைக் கற்பனைமூலம் எண்ணிப் பார்த்து அதைச் சொற்கள்மூலம் செய்யுள் நடை

யிலோ, உரைநடையினாலோ பிறர் உள்ளத்திலும் எழுமாறு அழகுபடச் செய்வதே 'இலக்கியமாகும்'—என்று இலக்கியம் பற்றிய கலைக்களஞ்சியக் கட்டுரை முடிவாகக் கூறுகிறது.

கவிதையை மனதிற்கொண்டே இவ்விலக்கணம் கூறப்பட்டுள்ளது' இன்றைய திறனாய்வு இலக்கியங்கட்கு இவ்வரையறை பொருந்தாமல் போவதில் வியப்பில்லை.

இலக்கியம் அனுபவத்தைத்தான் சொல்லவேண்டும் என்பதில்லை. அறிவாராய்ச்சியால் கண்டவற்றையும் கூறலாம். தாமசு மூரின் ''உடோப்பியாவும்'', டாக்டர் மு. வரதராசனாரின் ''கி. பி. 2000''மும், வ ரா அவர்களின் ''கோதைத் தீவும்'', அவ்வாசிரியர்களின் அனுபவ உண்மைகளல்ல. அறிவாராய்ச்சியின்மீது கட்டப்பட்ட கற்பனைகளே.

அப்படியானால் எதுதான் இலக்கியம்?

இலக்கியம் மனித வாழ்வோடு தோன்றியது. வாழ்வோடு வளர்வது, வாழ்வுக்குத் துணையாயும் வழிகாட்டியாகவும் விளங்குவது

வாழ்க்கை எவ்வாறு பரந்துபட்டதோ; அவ்வாறே இலக்கியத்தின் எல்லைகளும் பரந்துபட்டன. வாழ்க்கை என்றால் என்ன? என்ற கேள்விக்கு விடை சொல்வது அல்லது இலக்கணம் வகுப்பது எவ்வாறு எளிதல்லவோ அவ்வாறே எது இலக்கியம் என்று வரையறுத்துச் சுருங்கிய சொற்களால் கூறுவதும் கடினமே.

எனினும். ''கலைவடிவம் தரப்பட்ட சமயசிந்தனையின் வெளிப்பாடே'' இலக்கியம் என்று சொல்வது பொருத்தமான இலக்கணமாக அமையும். அந்த வெளிப்பாடு கவிதையாகவும் இருக்கலாம். உரைநடை வடிவில் கதையாகவும் இருக்கலாம்: நாடகமாகவுமிருக்கலாம்: திறனாய்வுக் கட்டுரையாகவுமிருக்கலாம்.

சுயசிந்தனையின் வெளிப்பாடு பயனின்றி இருப்பதால் அந்த வெளிப்பாடு இலக்கியமாகுமா? என்று ஒரு கேள்வி எழலாம். மனிதன் ஒன்றைப்பற்றிச் சொந்தமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டாலே அது பயனுடைய முயற்சிதான். ஆகவே சுயசிந்தனையின் வெளிப்பாடு பயனின்றி இருப்பதே இல்லை.

புகார்த்துறை

பேராசிரியர் கோ தெய்வநாயகம், எம். ஏ.

உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவிற் பரதர் மலிந்த பயங்கெழு மாநகராக விளங்கியது பூம்புகார் நகராகும். மலைத் தலைய காவிரி கடலிற் புகுகின்ற இயற்கைத் தன்மையினை உடைய இப்பகுதி, கடலொடு புக்க நிலையில் கடற்றிரையும், ஆற்றுநீர்த் தரங்கமும் ஆர்ப்பரிக்கத் தக்க வகையில் அமைந்து காணப்பட்டிருக்கின்றது. எனவேதான் காவிரி கடலொடு கலந்து ஆர்ப்பரிக்கின்ற இடமிது என அப்பகுதி நிலவியற்கை முறையில் (புக்கு+ஆர்) புகார் எனவழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

புகார் எனவழைக்கப்பெற்ற இப்பகுதியில் பூம்பொழில்கள் மிகுதியாக இருந்தன என்பதனை

''பூவிரி படப்பைப் புகார் மருங்கு எய்தி''

—சிலம்பு கடலாடு : 32

என்ற வரி புகலா நிற்கின்றது. எனவே இப்பகுதி பூக்கள் நிறைந்த மிகுதியான இளமரக்காக்களை உடையது புகார் என வழங்கப்பெற்று பூம்புகார் என அழைக்கப்பெற்றது

எழில் மிகுந்த இந்நிலவரைப்பில், காவிரி நதியில் புகார் என்றொரு வணிகத்துறை இருந்திருக்கின்றது, புகார் என்ற சொல்லே 'ஆற்றுமுகம்' என்ற பொருள் விளைய நிற்கின்றது. புகார் என்ற பெயரில் விளங்கிய துறைமுகம் காவிரியாற்றில் இருந்தது என்பதனை நமது சங்க இலக்கியங்கள் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

''கழை மாய் காவிரிக் கடல் மண்டு பெருந்துறை
இறவொடு வந்து கோதையொடு பெயரும்''

—அகம் : 123

என்ற அகநானூற்றுத் தொடர்கள் ''காவிரியில் இருக்கின்ற புகார்த்துறை வரையிலும் கடலின் அலைகள் புகுந்து வந்து துறையின் கரைகளில் இருல் மீன்களை எறிந்து, மகளிர் முதலாயினோர் நீராட அவர்தம் கோதைகளைத் தாம் பெற்று மீண்டன'' என குறிக்கின்றது.

''மலைமிசைத் தொடுத்த மலிந்து செலல் நீத்தம்
தலைநாள் மாமலர் தண்டுறைத் தயங்க'' —அகம் : 126

என்ற தொடர்கள் மிகச் சிறந்த புனல்யாறு மட்டுமல்ல இக்

காவிரி. இஃதோர் பூம்புனல்யாறுமாகுமென்று கூறி 'பூம்புகார்' என்ற பெயர்க்கு மற்றுமோர் விளக்கமாயமைந்தது.

இத்தகைய சிறப்புக்களையும் உடையதாக விளங்குகின்ற புகார்த்துறை எவ்வாறு "கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்" வணிகம் புரியத்தக்க வகையில் அமைந்திருக்க இயலும்? காவிரி யாறு இற்றையளவில் மிகச் சிறிய ஆருக அல்லவா கடலுடன் கலக்கின்றது? என ஐயமெழுமேலதற்கோர் விடையாக நமது சங்க இலக்கியங்கள் சான்றுகளைப் பகன்று செவ்விதின் விளக்கப் படுத்துகின்றன உண்மை நிலையினை.

"கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்று"
—அகம் : 126 - சிலம்பு - கடலாடு : 163.

என்ற தொடர் காவிரி எத்தகைய பரப்பினை உடைய நிலையில் விளங்கிற்று என்பதனை விளக்குகின்றது.

"கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம்" —அகம் : 62

என்ற தொடர் காவிரியாற்றில் ஓடிய நீரின் கடுவிசையினைப் பற்றியும் அது மிகுதியான கொடுஞ்சுழல்கள் அமைந்த நீர்ப் பரப்பு என்பதனையும் விளக்குகின்றது இந்த நெடுஞ்சுழிகள் கொடுஞ்சுழிகளாயும் விளங்கி ஆட்டனத்தி போன்ற நீச்சல் வீரர்களைக்கூட ஈர்க்கத்தக்க வலி பொருந்திய நிலையில் விளங் கிற்று என்பதனை அகநானூற்று 110 ஆவது பாடல் புகலுகின்றது.

சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையில் காணப் பெறுகின்ற 'இலங்குநீர் வரைப்பு' என்ற பகுதி கடலொடு கலக் கின்றமையால் எதிரலைகளை மிகுதியாகப் பெற்று அகற்சியினை உடையதாகவும் 'அம்புப் பாய்ச்சல்' போன்ற கடுவிசையினை உடைய புனலையும் உடையது இப் புகார்த்துறையாகும் எனத் தெளிவுபடுத்துகின்றது,

எனவேதான் ஒரு மாபெரும் கடற்றுறைக்கு உள்ள பெருமைகளனைத்தையும் புகார்த்துறை பெற்று விளங்கிய சிறப் பினுல் பிற நாட்டினின்றும் சோணுட்டிற்குக் கடல்வழி வந்த கலங்கள். கடலினின்றும் காவிரிநதியினுட்புக்கு, காவிரியின் நீரோட்டத்தை எதிர்த்துச் செலுத்தப்பெற்று புகார்த்துறையினை அடைந்தன என்ற செய்திகளைப் புறநானூற்று 30ஆவது பாடல்

......................................"கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது

புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடற் பஃறுறத்தன ''

என்ற தொடர்களால் 'கடலினின்றும் காவிரி நதியினும் புக்க வம்ப மாக்களின் பெருங்கலங்கள், பாய்மரச் சீலைகளைக்கூடக் களையாது சுமைப் பொருட்களை எடுத்து அகற்றிவிடாது புகாஅர்ப் பெருந்துறையினை நோக்கிச் செலுத்தப்பெற்றன ; அவ்வாறு சென்ற இடைப் பகுதியின் கரைகளில், பெருங்கடல் வளத்தினை எல்லாம் மரக்கலப் பரதவர் சொரிந்து சென்றனர்' என்ற வரலாற்றுச் சிறப்புடைய கருத்துக்களை எடுத்துப் புகலுகின்றது. எனவே, பிறநாடுகளினின்றும் வணிகப் பொருட்களுடன் வருங் கலங்கள் புகும் ஆற்றுத் துறைதான் புகாஅர்' எனவும் பொருள் கொள்ளலாகும்.

''மிசைப்பரந் தோண்டாது'' அப்பெருங்கலங்கள் செல்வதற்குக் காரணம் காவிரியாறு மிகுதியான அகற்சியினையும் ஆழத்தினையும் உடையதாக விளங்கியதேயாகும். இக் கருத்தினை.

''கழைமாய் காவிரிக் கடல் மண்டு பெருந்துறை''
—அகம் : 6, 123.

''கழை அளந்தறியாக் காவிரி''
—அகம் : 326.

என்ற தொடர்கள் விளக்குகின்றன.

அதாவது பெருங்கலம் செல்வதற்கான ஆழத்தினை அளப்பதற்குரிய 'ஓடக்கோலே' அமிழத்தக்க வகையில் மிகுதியான ஆழத்தினையுடையதாக அன்றைய புகார்க் காவிரி விளங்கிற்று.

பகலிலே இயல்பாகக் கடலினின்றும் கலங்கள் காவிரிநதியினுட்புகுதல்கூடும் ஆயின் இரவு நேரங்களிலும் அவை எளிதில் புகார்த் துறையினை அடைவதற்கு இலக்கமாகத்தான், இலங்கு நீர்ப்பரப்பிற் கருகில் கலங்கரை விளக்கமிருந்தது என்பதனை

''இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்''
—சிலம்பு : கடலாடு 141.

என்ற பகுதி விளக்குகின்றது.

இத்தகைய அகன்ற பெருங் காவிரி இன்றெங்கு போயிற்று? அன்று சோணாட்டுள் பேரியாருக ஓடி நில வளத்திற்கும் பயன் பட்ட காவிரி பின்னர் பல்வேறுபட்ட காலங்களில் பல கிளையாறுகளைப் பெற்றதனுல், தான் மெலிந்து நிற்பதாயிற்று, பிற்காலச் சோழர்களும் பிறரும் இப் பேரியாற்றைப் பிரித்து நாட்டை

வளப்படுத்தியிருக்கின்றனர் என்பதனை வீரசோழனாறு, முடி கொண்டானாறு, திருமலைராயனாறு போன்ற கிளையாறுகளின் பெயர்களால் உய்த்துணரலாகும்

கடலுக்கும் நாளங்காடி இருந்த இளமரக்காவிற்குமிடையே தான் காவிரிநதியின் வடபுறக் கரையிலே 'புகார்' எனப் பெற்ற வணிகத்துறை இருந்திருத்தல் வேண்டும். இத்துறையினை அடுத்த நிலப்பரப்பில்தான் 'வேயா மாடமும் வியன்கல இருக்கையும், மான்கட் காலதர் மாளிகை இடங்களும், கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும் பயனறவறியா யவனரிருக்கையும், கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள் கலந்திருந்துறைந்த இடங்களும் கடற்கரையை ஒட்டிய பகுதிகளிலே காணப்பெற்றிருக்கின்றன என்பதனைச் சிலம்பின் இந்திரவிழவூரெடுத்த காதை இனிது புகலுகின்றது

புகார்த்துறையினை அடுத்து "வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிகள்" மிகுதியாக அடுக்கி வைக்கப்பட்ட "உள்ளுநர்ப்பனிக்கும் வெள்ளிடை மன்றம்" இக்காலத்தில் பண்டகசாலைகளைப்போல் அமைந்திருந்தது

புகார் என அழைக்கப்பெற்ற ஒரு நிலப்பகுதியின் பெயர் நாளடைவில் ஒரு நீர்த்துறைக்கே பொருந்தி விளங்கிய செய்தியினை,

> "காவிரிப் பேர்யாற்று அயிர்கொண்டு........ ..
> புகாஅர் நல் நாட்டதுவே"
>
> —அகம் : 181.

என்ற பகுதி விளக்குகின்றது

இத்தகைய வணிகத்துறை ஒன்று அக்காலத்தே இருந்தது என்பதற்குச் சான்றாகப் புதைபொருள் ஆய்வுத் துறையாளர்கள் புகார் நகரத்தினை அகழ்ந்து பல சான்றுகளைக் கண்டுள்ளனர். கீழையூரில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட படகுகளைக் கட்டிவைக்கின்ற துறை இக்கருத்திற்கு உறுதுணையாக நிற்கின்றது.

ஆகவே, புகார் என வழங்கப்பெற்ற ஒரு பெருவணிகத் துறை பெருநாவாய்களும் தங்கியிருந்து வணிகம் செய்யத் தக்க அளவில் தகுதியுடையதாக காவிரியாற்றில் வடகரையில், புகார் நன்னாட்டில் அமைந்து சோணாட்டு வணிகப் பெருக்கத்திற்குப் பேருதவி புரிந்தது என்பது இக்கட்டுரையிற் காணலாகும் கருத்தாகும்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

பூங்குன்றனரது புறப்பாட்டின் பொழிப்புப் பொருளினைக் கண்டபின், அப்பொருளாற் பொருந்தும் பயனையும் இனி ஆயத் தக்கது. ஒன்றே பரம்பொருள் என்றும் அதன் மக்கள்குலமாகிய நாமும் ஒன்றே என்றதையும் கருத்திற்கொண்டு, பூங்குன்றனர் 'எதுவும் ஊர்தான்; எவரும் உறவினர்' என்ற ஏற்றத் தாழ்வு காணாத வகையில் ஞாலத்து சகோதர தத்துவத்தை, மக்கள் பண்பாட்டின் வழி உணர்த்தி. அன்னரது ஆன்மநேய ஒருமை வாழ்வை வளர்த்தார்! மற்றும் 'யாதும் ஊரே. யாவரும் கேளிர்' எனும் பரந்த பண்பாட்டை செவ்வியதாக பறைசாற்றி. அவ் விழுமிய பண்பாட்டில் ஊறும் அறிவு, இச்சை. செயல்கள்மூலம். வாழ்வியலில் பொதுமை யொருமையினைக் கணியனர் உருவாக்கிய திறன்மிக்கதோர் செம்மை சான்றது 'யாதும் ஊரே' என்றதினல், எமது ஊர் இவ்வுலகமே எனப் புலனாக வைத்து, அவர், ஊர் நலனல் உலக நலனை விரும்பும் உள்ளப் பாங்கையும் மனமலர்ச்சியால் அளிசெய்து உறவுகொள்ளும் போக்கினையும் மக்களுக்கு விளக்குகிறார். மற்றும் வாழ்வு நன்னிலை யெய்துமாறு அருளுறவு முந்துறுத்த அன்பு நெறியினை வளர்க்க முற்பட்டு. வாழ்வுப் பயனுக்காக அருட்செல்வத்தின் இன்றியமையாமையினையும் அருளால் உண்மையாய அறம் வளரும் பான்மையினையும் குறிப்பால் புலப்படுத்துவாராயினர்

உலகின்கண் வாழும் யாவரும் எம் உறவினரே' யென்றதின் வழி, பூங்குன்றனர், மக்களுள்ளத்தைப் பண்படுத்தும் அருளின் வன்மையினை விளக்கி, அறிவில் கொடும்பாடு புகாத வண்ணம், அருளுணர்வை பண்பாட்டுடன் தழைக்கும்படி செய்துள்ளார். மற்றும் அருளுணர்வையும் அருளறத்தையும். எவ்வுயிரையும் தன்னுயிராய் எண்ணி உவக்கும் மனப்பான்மையில் தோய வைத்து. பண்பாடென்பது மக்களை அறிவறிந்த மக்களாக மானமுடன் வாழ்தலை உணர்த்துவது என்ற கருத்தை உருவாக்கிவிடுகிறார். முக்குணப் போராட்டத்தில் உழலும் மக்களுயிர்களை செம்மைப்படுத்தி பயிற்சியளிக்கும் பண்புகளில் முக்கியமானவை அன்பு, நாண். ஒப்புரவு, கண்ணோட்டம்; செப்பம், வாய்மை என்பனவே. இவைகளைப் பற்றிக்கொண்டு அறத்தொடு ஒழுகும் மனம், அகப் புறத் துறை வாழ்வில் பொருத்தமுற நின்று தழுவி சிறந்தோர் பண்பாட்டை எளிதே பெறுதல் இயல்பு. இத்தகைய பண்பாட்டியல்பில் வாழ்க்கை

யனுபவத்து உணர்ச்சிகள் நன்னிலையில் உறவுகொண்டு மிளிர்வதில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த நோக்குடைய மனச் செம்மையின் தத்துவம் உறைகின்றது. இஃதே வாழ்வின் குறிக்கோளையும், விழுமிய பண்பாட்டையும் அறமரபின் ஒழுக்கத்து உணர்ச்சியினையும் உருவாக்கவல்லது. இம்மனச் செம்மையிலும் பரந்த நோக்கிலும் துலங்குகின்ற உணர்வியல் நிலையே, வாழுமுயிர்களை உயர்வாக்கி வாழ்விக்கின்றது.

மற்றும் மக்கள் வாழ்வில் நிறைவுகாண, முரண்களிடையே 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற ஒற்றுமையாய அரணைக் கண்டுகொள்ளும் மனப்பக்குவ மலர்ச்சியில் உலகிற்கு உரிய தாய அத்வைதமெனும் தத்துவ நெறி ஒளிர்ந்து புலனாகுவதை நுட்பமாக வெளிப்படுத்தும் இவரது கவித்திறன் சிந்தித்து போற்றற்குரியது இப் பாட்டினிலே பிறந்த அத்வைத நெறி, அகத்துறையில் காதலன்பு ஒழுக்கத்தால் மலர்ந்து, புறத்துறையில் ஒழுக்கத்து விழுப்பத்தில் எழும் கடவுட் காதல் நெறிக்கு வித்திட்டது. அத்வைத அனுபவியாகிய குன்றனாரது அருளால் இது பின்னர் சமயச் சார்புகொண்டு சுரந்து இலங்கவே, மக்களது சமய பண்புக்குத்தக, பல்வகையாய அத்வைதங்கள் தமிழகத்தே விளங்கித் தோன்றலாயின. யான், எனது என்பதை இழக்கவைக்கும் கணியன்பூங்குன்றனாரது அத்வைத தத்துவம். ஒன்றாய பரம்பொருளே எல்லாமாய்த் தோற்றுகிறதென்பதையும். அறிவையன்றி அறியப்படும் பொருள் யாதுமில்லையென்பதையும் உயிரும் பரம்பொருளும் வேறல்லயென்பதையும் உணர்த்துவதாயிற்று. இத்தகைய அத்துவித அனுபவத்தையும் பாவனையும்பற்றி பூங்குன்றனார் தமது பாட்டின்கண் குறிக்கப்பட்டிருப்பதை நுணுகி ஆய்ந்து வகுக்கவல்லார் நன்குணர்ந்து கண்டுகொள்வர். சற்று ஊன்றிச் சிந்திக்கின், கணியனார், கணிதத்தில் அத்வைதம் உள தென்றும், கணிதத்தின் அடிப்படை அத்வைதமேயென்பதையும் புலப்படுத்தியது அறியப்படும்.

இவ்வாற்றால், குன்றனார் தம் வாழ்வில்கண்ட கலையுணர்வால் நல்லுலகைப் படைக்க ஆர்வங்கொண்டு மக்களது பண்பாட்டை உயர்த்தமுயன்றது உணரப்படும். 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்பது பொய்யாமொழி 'யாவரும் கேளிர்' என்ற முறையில், ஆன்மநேய ஒருமைப்பாட்டினுணர்வோடு அருள்மிகு விவேகாநந்தர், அகில சமய அரங்கினிலே தம் சொற்பொழிவினைத் தொடங்கும்போது 'சகோதர, சகோதரிகளே' என உலகை விளித்து உடன் பிறப்பினுரிமையினை ஒட்பமாய்க்கொண்

டாடி அழைத்தது, ஆங்கு குழுமியுள்ளாரது உள்ளம், மலர்ச்சியும் விழிப்பும்கொண்டு குளிர்ந்ததும், சிந்தை அழகொழுக அன்புத் திறன்கொண்டு களிப்பால் ஒளிர்ந்ததும், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற நட்புறவு பண்பாட்டின் ஒள்ளிய கருத்தை விளக்குவதாகின்றது.

வாழ்விலும் தாழ்விலும் தளராத மனத்தினைக்கொண்டு, இன்ப துன்பத்தை ஒன்றாகக் கருதும் மன அமைதியோடு பெரியோரைப் பாராட்டி வியத்தலும் செய்யாது சிறியோரை இகழ்தலுமில்லாத மனப்பண்பு ஒருவருக்கு பக்குவமாக அமையின், அன்னவருக்கு 'யாதும் ஊரே, யாவரும் கேளிரே' என்ற சகோதரத் தத்துவப் பேறு உளதாகும் என பூங்குன்றனர் உணர்த்துவாராயினர் ஓரறிவுமுதல் ஆறறிவு உயிர்கள் ஈறாக அனைத்துயிர்களின் துன்பங்களை வேறுபாடின்றிக் கண்டிரங்கி வாடும் தகைமையுடையார்களுக்கு யாதும் ஊராகத் தோன்றும். எவரும் கேளிராகத் தோன்றுவார்கள். இதனுன் இயற்கை யோடு இணைந்து நின்று எல்லா உயிர்களிடத்தும் தன்னை ஒன்றுபடுததிக்கொள்ள முயல்வோர்க்கு தன்னைத் தானே தூய்மைப்படுத்திக்கொள்ளாமல் இருக்க இயலாது மனம் மொழி செய்கைகள் ஒன்றிப் பொருந்த உளமகிழ்வோடு காட்டு முல்லைக்கு தேர் நல்கிய பாரியும், கான மயிலுக்கு கலிங்கம் ஈந்த பேகனும் இத்தகையராவர். முல்லையும் மயிலும் தளர்நிலையினை யெய்தியதைக் கண்ட ஞான்று மனநெகிழ்ந்து இரக்கமுற்று பாரியும் பேகனும் முறையே இயைபில்லாத் தேரையும் போர்வையையும் அவைகளுக்கு ஈந்தது, அவர்கள் தம்முள்ளத்தில் பதிந்துள்ள கொடைக் கடமையால் இன்னது செயற்பாலதென்று உணராத நிலையில் எத்துணையும் காலம் தாழ்க்க மனமின்றி அக்கணமே தம்பால் இயற்கையில் அமைந்து கிடக்கும் தண்ணளிச் செய்தலைக் குறிக்குமேயல்லாது பிறிதில்லையென்பது பெறப்படும் இத்தகைமைசால் பண்புடையாரே ஒன்றே குலமென்பார். ஒக்கும் பிறப்பென்பார் உயிர்களுக்கு இடர்வந்துற்றபோது அதனைப் படராது காக்கும் அன்னவர் தம் அருள் உள்ளங்களில் தோன்றுகின்ற உணர்வியல் நிலையே, வாழுமுயிர்களை உயர்வாக்கி வாழ்விக்கின்றதாகும். சீர்த்த அறிவு கொண்டு விளங்கியதாயுமான ஞானச்செல்வர் 'எவர் உறவர் எவர் பகைஞர்' என்றதும், பெருந்தகை சான்ற பெருந்துறைப் பிள்ளைதம் யாருற்றார் யாரயலார்' என்றதும், அன்னர் வேறுபாடு காணாத சகோதர தத்துவத்தைப் புறக்கணிக்காது உணரும் பெற்றியினையும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டினையு முடையாரென்பதும் அறியப்படும்.

— தொடரும்

41-ஆவது துணர் 11-ஆவது மலர் 312-ஆம் பக்கத் தொடர்ச்சி :—

தமிழ் நூற் குறியீட்டு விளக்கம்

பேராசிரியர் ச. பாலசுந்தரம், கரந்தைப் புலவர் கல்லூரி.

இம்மரபானே முதலும் சார்புமாகிய எழுத்துக்கள் தனித்தும் தொடர்ந்தும் பிறபொருளைச் சுட்டும் சொல்நிலையெய்த எடுக்கும் வடிவாகிய உரிச்சொற்கள். பெயராகவும் வினையாகவும் ஆக்க முறுங்கால் ஒருசில மாற்றமுறுதலும். பெயர்வினைகளாகி நிறைந்த பின்னரும் ஒருசில மாற்றமுறுதலும். மாற்றுரு வெய்திய நிலையில் படிப்படியாக வெவ்வேறு தொடர்புடைய பொருள்பெற்று நிகழ்தலும். இரண்டு முதலாய உரிச்சொற் களும் பெயர்வினைச் சொற்களும் சேர்ந்து ஒரு பொருளைச் சுட்டிவருங்கால் அவை சுருங்குதலும் சுருங்கித் திரிதலும் பிறவும் இனிமைசான்ற நம் தமிழ்மொழியின் இயல்பாகும். இவற்றை ஒருசில எடுத்துக்காட்டுக்கள் வாயிலாகக் காண்போம்.

(1) நிலம். நீர். தீ. வளி. வான் முதலிய சொற்கள் பொருளைச் சுட்டி வரும் பெயர்ச் சொற்கள் என்பதையும், நட, வா, மடி, சீ முதலிய சொற்கள் பொருளின்புடை பெயர்ச்சியைச் சுட்டிவரும் வினையடிச் சொற்கள் என்பதையும் அறிவோம். இவற்றுள் ஒவ்வொன்றை எடுத்துத் தமிழியல் மர பின்படி உரிச்சொற் பகுதியையும் அதற்குரிய மூலத்தையும் (வேர்ப்பகுதி) ஆராய்வோம்.

நிலம்; இச்சொல் ஈண்டு மண் செறிந்த (ஈரப்பசை உடைய) புவியிடத்தைக் குறிப்பதாகும். இந்நிலமானது பிற கருப்பொருள்களையெல்லாம் தாங்கி நிற்கும் இதன் பொருட் பெற்றியால் இச்சொல் எப்பொருளாயினும் தன்கண் தங்கு தற்காம் குறிப்புடையதாய் நிரம்பிக் காட்சிப் பொருள் கருத்துப் பொருள் ஆகிய யாவற்றையும் தாங்குதலாய செயலை மேற் கொண்டு ஏழாம் வேற்றுமைக்குரியதாய்த் திகழ்கின்றது [பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே அங்கதம் முது சொல்லோ டவ்வேழ் நிலத்தும் தொல் - செய் 78 இருவகை நிலத்தின் இயல்வது சுவையே, என்னும் இடங்களில் கருத்துப் பொருள் இடமாகி நிற்பதைக் காணலாம்.] இச்சொல் நில்+ அம் என்ற இரண்டு மூலங்களால் இணைந்து ஒருபொருள் தரும் ஒருசொல். இவற்றுள் முதல் நிற்கும் 'நில்' என்பது

இயக்கத்திற்கு எதிர்மறையாகிய செயலைக் குறிப்பதாகும். 'அம்' என்பது இடத்தைக் குறிக்கும். அகம் என்னும் சொல்லின் இடைக்குறை. இவை நிலைமொழி ஒற்றிரட்டாமல் புணர்ந்தன. வினைத்தொகை இயல்பால் இது நிற்றலை உரியது என்னும் பொருளில் வழங்குகின்றது. புவி இயக்கமுடையதெனினும் நீர். தீ, வளி. வான் முதலியவற்றை நோக்க (நீர்ஓடும் தீமேலெழும். வளி சுழலும். வான் பரவும் ஆதலின்) வெளிப்படையாக இயக்கங் காணப்படாமையின் நிற்றலை உரியது எனக் குறிப்புப் பொருள்கொண்டதென்க. இனி இந் நிலம் இயக்கமுடையது எனக் கருதுங் காலை "உலகம்" (உலவுதல்-உலகம்) காணப்படுதலால் உலகம் (லோக்) என்பது வடசொல் என்றும், சுவையுடையதாகக் கருதும்பொழுது 'மண்' என்றும், பொருள்களைத் தோற்றுவிப்பதாகக் கருதும் பொழுது புவி (பூ+இ) என்றும். பற்றுக்கோடின்றி நிற்பதாகக் கருதும்போது 'ஞாலம்' என்றும் வழங்கும். இவ்வாறே பார், படி, அகலம் முதலாய சொற்களுக்கும் தனித் தனியே சிறப்புப் பொருள் உண்டு என அறிதல் வேண்டும் ஒரு பொருள் குறித்த வேறு சொல் (தொல் — சொல் — எச்சவியல்-3) என்புழி அவற்றின் பொதுப் பொருள் நோக்கி என உணர்க.]

மன்றம் (மன்று + அகம்) குன்றம் (குன்று + அகம்) என்றாற் போல நில் அம் (அகம்) என்ற இச்சொற்களுள் 'அம்' என்பது இடப்பொருள் விகுதியளவிற் பொதுவாய் நிற்றலின் இச்சொல்லிற் பொருள் நோக்குடையது 'நில்' என்பதேயாம் இதுவே இச்சொல்லின் உரிச்சொற் பகுதியுமாம். இன்னும் இதனை வகுத்துக் காணுங்கால் ந் + இ + ல் என மூன்றொலிகள் உண்மையை அறியலாம். இவற்றுள் பின்னிரண்டையும் சேர்க்க 'இல்' என வருதலும் 'இல்' என்பதும் ஓராற்றான் இடப் பொருள் குறிப்பதையும் காணலாம். எஞ்சியுள்ள நகரம் நீர்மை (பசை) யைக் குறிக்கும். இவ்வாறே இல் என்பவற்றுள்ளும் 'இ' என்பது பரவற் குறிப்பையும் லகரம் செறிவுக் குறிப்பையும் உணர்த்தும். இதனைத் தமிழ்ச் சொற்கள் பலவற்றை நுணுகி நோக்கின் உணர்ந்து கொள்ளலாம் இசை குறிப்பு. பண்பு என்ற பொருள் புலப்பாட்டு வகை மூன்றனுள் (ந் + இ + ல்) நகரம் பண்பிலும் ஏனைய குறிப்பிலும் அடங்கும்

ஈண்டு ஓர் பொது உண்மையை நாம் காணலாம். அஃதாவது பொருளைச் சுட்டி வரும் பெயர்ச் சொற்களுள் பெரும்பாலானவை செயற் குறிப்பின் அடிப்படையில் தோன்றி நிற்கும் என்பதே அது. மொழிநூல் அறிஞர் பலரின் கருத்தும் இதுவே யாம்.

அடுத்து வினைச் சொற்களுள் 'நட' என்ற சொல்லை எடுத்துக்கொண்டு அம்முறைப்படி ஆய்ந்து காண்போம். 'நட' (நடத்தல்) என்பது நிற்றல் என்னும் செயலுக்கு எதிர் மறையாய அசைவு அல்லது இயக்கத்தைக் குறிக்கும். இயக்கத்தினைக் குறித்துவரும், போதல், படர்தல், சேறல் பரிதல், விரைதல். முடுகல், ஓடுதல், பெயர்தல் முதலிய சொற்களினின்றும் நடத்தல் என்பது வேறுபட்டதாகும். இதற்குரிய செம்மையான பொருள் நின்றிருக்கும் ஒரு பொருள் இயங்கத் தொடங்கி இயக்கத்திற்குரிய கருவியை (கால்கள்)ப் படிப்படியாக ஒன்றின்பின் ஒன்றாக எடுத்து ஊன்றியும் பெயர்த்தும் ஊன்றியும் செல்லுதலாம். ஊன்றுதலாவது நடல் (நடுதல்) இதன் உரிச் சொற்பகுதி 'நட்' என்பதாம் இதுவே இதன் பகுதி என்பதனை ஐ என்னும் செயப்படுபொருள் விகுதி சேர்ந்துள்ள நடை (நட் + ஐ) என்ற சொல்லால் உணரலாம். 'நட்' என்ற பகுதி உகரச்சார் பொலி கூட்டி எடுத்துச் சொல்ல 'நடு' என்னும் ஏவற் பகுதியாம். நடு என்ற சொற்பொருளுக்கு எதிர் மறையானது 'நட' என்பதாகும். எனவே 'நட்' என்ற பகுதி போக எஞ்சியிருப்பது அகரமாகும் இதுவே அந்த எதிர் மறைப் பொருளை உணர்த்தல் வேண்டும், ஆம், இந்த 'அ' என்பது அல் என்பதன் ஈறு கெட்ட இடைச்சொல் வடிவமாகும். எனவே ஊன்றுதலுக்கு எதிர் மறையாய் (நட் + அல்) நடுதல் அல்லாதது என இயக்கத்தைச் சுட்டி வருதலையும் தெளியலாம். இவற்றுள் உள்ள எழுத்தொலிகள் ந் + அ + ட் என்பனவாம் இவற்றின் குறிப்புக்களை நோக்குவோம்; நோக்குங்கால் நகரம் நீர்மைச் சார்புடைய ஒழுகற் பண்பாகிய குறிப்பையும் அகரம் ஆக்கக் குறிப்பையும் டகரம் செயற்குறிப்பையும் காட்டும் (அடி. அடு. அடை அடுக்கு அட்டு அடக்கு என்னும் சொற்களுள் 'அட்' என்பது நின்று செயலைக் குறிப்பதை ஓர்க) இவற்றுள் அகரம் உளத்தின் (முயற்சி) செயலையும் டகரம் உடம்பின் செயலையும் சுட்டும் என்பதனை நுணுகி நோக்கி உணரலாம்.

இவ்வாறு ஒவ்வோர் எழுத்தும் ஒரு பொருட்குறிப்பை உடையதென்னும் இவ்வாராய்ச்சி விநோதமானதன்று. இதுவே தமிழ் மொழியின் இயல்பும் சிறப்பும் ஆகும் என்பதனை முன் இதழில் காட்டப்பட்டுள்ள எழுத்துக்கள் பொருள் வேறுபாடு தரும் விளக்க அட்டவணை நோக்கியறியலாம்.

(2) மேற்கண்ட நிலம். நட என்னும் இச் சொற்கள் உரிச் சொற்பகுதி திரிபுறாமல், பின்னொட்டுக்கள் மட்டும் சேர்ந்து பெயர் - வினைகளின் பகுதியாகி நிற்கின்றன. இவ்வியல்புடைய

சொற்கள் ஒரு தொகுதியாகும். இனி உரிச்சொற் பகுதி திரிந்து நிற்கும் சொற்களை ஓரிரு காட்டுக்களாற் காண்போம்.

நூல்: இச்சொல் பஞ்சினுலாகிய இழையையும், சொற்களாலான புத்தகத்தையும் குறித்து நிகழ்கின்றது. (புத்தகம் - புத்தியை அஃதாவது அறிவைத் தன்னகத்தே வைத்திருப்பது என்னும் பொருளுடையது - புத்தி தமிழ்ச் சொல்,) இழையைக் குறிப்பின் இதன் தொல்வடிவம் நுய்யல். புத்தகத்தைக் குறிப்பின் நுவொல். நூல் என்பதற்கு வேறு பொருள்களும் உள. அவற்றை இயைபு நேரின் ஆராய்வோம். முதற்கண் பஞ்சினுலாகிய நூலைப் பார்ப்போம். இந்நூலுக்கு முதற் காரணமாகிய பஞ்சு மென்மையும் பன்மையும் உடைமையின் நுய் எனப்பட்டது. 'நுய்', உரல் ஓரல் என்றுற்போல நொய் எனவும் வழங்கும். இந் நுய்யினைக் கதிர்கொண்டு திரைத்தபின் அஃது வன்மையும் ஒருமையும் பெறுதலால் அச் சொற்பொருளை எதிர்மறுக்கும் அல் என்னும் குறிப்பு வினைப்பகுதி கூடி நுய்யல் என்ருகி அஃது ஒரு சொல்லாக வழங்குமுகத்தான் எய்யில் — எயில் என்ருற்போல நுய்யல் - நுயல் என நின்றது. இந்நுயல் என்பது; மயல் - மால், பெயர் - பேர், வியர் - வேர் (வேர்வை) என்பனபோல ஒற்றடுத்த இணைக்குறிலாதலின் குறிலிணை ஒரு நெடிலாகி 'நூல்' எனத் திரிந்து வழங்குகின்றது.

இனி, புத்தகத்தைக் குறிக்கும் நூல். நுவொல் என்பது ந்+ஒல் என்ற இரு வேர்ப்பகுதிகளினின்றும் பிறந்த ஒரு சொல்லாம். இவற்றுள் நகரம் 'நா'வையும் 'ஒல்' ஓசையையும் சுட்டும் உரிப்பகுதிகளாம். நகரம் நீர்ப்பசையைக் குறிக்குமென மேலே கண்டோம் எனவே நீர் சுரக்கும் உறுப்பாதலின் ந்+ஆ = நா (நாக்கு) என்றும் பசையாக்குதல் என்னும் பொருளில் நக்குதல் என்றும் வழங்குதலால் நகரம் நாவைக் குறிக்குமென்பதை யறியலாம். ஒற்றெழுத்துக்கள் மொழி முதற்கண் வாராதாகலின் சார்பொலியாகிய குற்றுகரம் முதற்கண் கூடி ந்+உ = நு என நின்று ஒல் என்பது வகர உடம்படு மெய் பெற்று ஒற்றிரட்டாமல் நுவொல் என்ருகி நு - வொ இரண்டும் இதழ் குவிக்கும் முயற்சியுடையவாகலின் வொ - வ எனத் திரிந்து நுவல் என நின்றது. இச் சொல்லின் பொருள் நாவின் ஒலி - நாவால் ஒலிக்கப்படுதல் - என்பதாம் இவ் வியல்பால் நுவல் என்பது ஆகுபெயராய் புத்தகத்தைக் குறித்துவரும், ஒரு பொருள் குறித்து வருவது நுவல் (நூல்) பல்பொருள் குறித்து வருவ பல்+நுவல் = பன்னுவல். பனுவல் என நின்றதென்க. இப்பன்னுவல் என்பதே சிறிது திரிந்து

பன்னல் என்ருகிப் பன்முறை பேசுதலைக் குறிக்கும் சொல் லாய்த் திகழ்கின்றது. இச் சொல்லும் ஒற்றடுத்த இணைக்குறி லாகலின் குறிலிணை நீண்டு நுவல் — நூல் என நின்றது. இச்சொல் இலக்கணத்தையே குறிக்கும் என்று இடைக்காலத் தவர் வரையறை செய்துகொண்ட காலை இச் சொற்பொருளை ஆயாமலும் திரிந்ததன் பயனைத் தெரியாமலும் பஞ்சினுல் ஆகிய நூலை உவமையாகக்கொண்டு உவமை ஆகுபெயரெனக் கருதி அதற்கு விளக்கமாக

> பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
> செஞ்சொற் புலவனே சேயிழையா — எஞ்சாத
> கையேவா யாகக் கதிரே மதியாக
> மையிலா நூன்முடியு மாறு

என்று கூறி, மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு எனப் பயனையும் கற்பனை செய்தனர். இவ்வாறு காலத்தாற் திரிந்து வழங்கும் கருத்துக்கள் பல, அவற்றை நேர்வுழிக் காண்போம்.

(3) இனி மாற்றுருவெய்திய நிலையில் தொடர்புடைய வெவ்வேறு பொருள் உணர்த்திவரும் சொற்களுள் ஒன்றிரண்டு காண்போம் மக்கள் உடம்பினைக் குறிக்கும் சொற்கள் பலவுள. அவற்றுள் உடம்பு, மெய் என்னும் இரு சொற்களைப் பார்ப்போம். உடம்பு என்பது உடல் என்னும் சொல்லின் செந்தமிழ் வடிவம். இஃது உட் + அல் என்னும் இரு சொற்கள் இணைந்த ஒரு சொல். இவற்றுள் முதலாவதாகிய உட் என்பது உரிமை யுடையது (சொந்தம்) என்னும் பொருள் தரும் உடைமை என்னும் சொல்லின் முதனிலையாகும். இஃது 'அல்' லென்னும் எதிர்மறையோடு கூடி உயிருக்குச் சொந்தமல்லாதது (திரேகம் என்னும் வடசொற் பொருளும் அது) என்ற பொருளையும் 'உட்' பொருந்துவது, அணிவது என்னும் பொருள் தரும். உடை என்பதன் முதனிலையாய் ஆதல் என்பதன் சுருக்கமாகிய அல் விகுதிபெற்று உயிருக்கு உடையாக இருப்பது என்னும் பொருளையும் (இப்பொருள் வடமொழிச் சட்டகம் என்னும் பொருளுக்கு நேரானது) தந்து நின்று பின்னர் பசி முதல்ய நோயால் உயிரைத் துன்புறுத்துதலின் உடலுதல் - துன்பம் என்ற பொருளைச் சுட்டியும், பசி முதலிய துன்பத்தைப் போக்க முயன்று உழைத்தலும் பகையை எதிர்த் தழித்தலுமாகிய செயல் புரிதலின் சினம், கெடுத்தல், அழித்தல், போரிடுதல் முதலிய பொருள்களைப் பெற்றும் பயின்று வருதலைக் காணலாம். இச்சொல் புகரமாகிய தொழிற்பெயர் விகுதிபெற்று

உடல்பு என்ருகிப் பின் லகரம் ளகரமாகிப் பின் மகரமாகத் திரிந்து உடம்பு என நின்று உயிர் உறையும் இடம் என்னும் பொருளில் வழங்குதலையும் உவம வாயிலாக மெய் எழுத்துக்களைக் குறித்து வருதலையும் காணலாம்.

இவ்வாறே மெய் என்ற சொல்லும் 'மே' என்ற பகுதியும் குற்றியலிகர விகுதியும் பெற்று (மே+இ) என வந்து இகர யகரம் இறுதி விரவும் ஆதலின் மேய் என்ருகிப் பின் 'மெய்' என நின்றது. உயிரை மேவி இருப்பது என்பது இதன் பொருள். அஃதாவது மூடியிருத்தல், பொருந்தியிருத்தல் என்க. இச்சொல் உடம்பை உணர்த்துங்கால் அவ்வுடம்பு கண்கூடாகக் காணப்படுதலின் மெய் என்பதற்கு உளது - உண்மை என்னும் பொருள் விரிந்தும், காணப்படாத உயிரைத் தான் மேவி நின்று அதன் இயல்பைச சுட்டுதலான் 'மெய்' என்பது பொருள் என்ற பொருளில் விரிந்தும் (மெய்ப்பாடு — பொருட்பாடு) உடம்பு விரும்பப்படுதலால் மேய் ஃம எனத் தொல்வடிவம் பெற்று விருப்பம், நசை என்ற பொருளைக் காட்டியும், பொருட்டன்மை அழியாததாகலின் என்றும் உளது (மெய் உணர்வு) என்னும் பொருளிலும் - உவம ஆகுபெயராய் ஒற்றெழுத்து என்னும் பொருளிலும் பிறவாறும் வழங்குதலைக் காணலாம்.

இனி இரண்டு முதலாய சொற்கள் இணைந்து ஒரு பொருளைச் சுட்டுங்கால் அவை ஒருருவாய்ச் சுருங்குதலும் திரிதலும் ஆகிய நிலைக்கு ஓரிரு எடுத்துக்காட்டுக்கள் காண்போம். சோழர்க்குரிய நாடு என்னும் பொருளில் சோழனாடு - சோழநாடு- சோணாடு எனப் பல்வேறு உருவுகொண்டுள்ள இச்சொல் (சோழ் + அம். சோழ் + அன்) சோழ் என்னும் பகுதி இடத்தைக் குறிப்பின் அம்விகுதியும் - மக்களைக் குறிக்கும்போது ஒருமையில் 'அன்' பன்மையில் 'அர்' என விகுதிபெற்றும் நாடு என்னும் வருமொழியில் உள்ள தந்நகரத்தை நோக்கிழகரம் ளகரம் போலப் புணர்ச்சி விதி பெற்றுச் சோணாடு என்றும் வழங்கும் சோணாட்டின் தொல் வடிவம் சோனாடு எனலாம் (சோல் + நாடு) ஏனெனின் சோழர் நாடு மருதமும் முல்லையும் மிக்க நாடு அஃதாவது சோலைகள் நிறைந்த நாடு என்க. லகரம் சிறப்பு ழகரமாகத் திரிந்துள்ளது எனக் கருதலாம், இனி 'சூழ்' என்பதே சோல் எனத் திரிந்து சோலையை உணர்த்திற்று எனக் கொள்ளின் சோணாடு என்பதே இயற்கையும் தொன்மையும் உடையது எனலாம்.

மற்றும் வடக்கின் கண்ணது எனற்பாலது வடக்கது எனச் சுருங்கி வடாது என நிலைபெறும். மலையன் நாடு அல்லது மலையமான் நாடு என்பது மலாடு எனக் குறைந்தும் திரிந்தும் வரும். இவை போல்வனவற்றை இயல் நூலார் மரூஉ என்ப. மேலும் எம் + தை ≈ எந்தை — நும் + தை ≈ நுந்தை தம் + தை ≈ தந்தை என்றாற்போல சாத்தன் + தை ≈ சாத் தந்தை பூதன் + தை பூதந்தை —> பூந்தை ஆதன் + தை ≈ ஆதந்தை — ஆந்தை என்பவற்றையும் அரு + மாந்தன் + பிள்ளை (மாந்தர் என்னும் பன்மைப் பெயராகவும் கொள்ளலாம்) அருமாந்தப் பிள்ளை — அருமந்தப் பிள்ளை என்பதையும் முறையே சாத்தன் + தந்தை — என்பவற்றின் மரூ என்றும் அருமருந்தன்ன பிள்ளை என்பவற்றின் மரூ என்றும் கருதினர் இலக்கண உரையாசிரியன்மார். ஆந்தை என்னும் சொல்லும் ஓராற்றான் மரூ ஆகாமையை உணரலாம். ஆதன் என்றால் முதல்வன் இதற்குப் பெண்பாற் சொல் ஆதி — இதற்குப் பகுதி 'ஆத்' என்பதாகும், தை என்னும் முறைப் பெயர் இணைந்தகாலை தகரம் நகரமாக, மலிய ஆந்தை என நின்றது எனலாம். முதல் அல்லது மூத்த தந்தை என்பது இதன் பொருள் — ஆதன் என்பவனுக்குத் தந்தை என்பதே இதன் பொருளாயின் மரூஉ வெனக் கொள்ளலாம்.

இனி, நல், பொல், வெள் — பச் — செவ் முதலிய பண்புரிச் சொற்கள் நன், பொன், வெண் — பை — செம் எனத் திரிந்து நிற்றலும் — வியல், வியன், அகல், நிகர், பகல் வியர் முதலிய குறிப்புச் சொற்கள் முறையே வேல் (வேலை — கடல்) வான் ஆல் (மரம்) நேர், பால் (பகுப்பு) வேர் (வேர்வை) எனத் திரிந்து நிற்றலும் — போழ்து பொழுதெனவும் வழுத்து வாழ்த்து எனவும் சுருங்கியும நீண்டும் பிறழ்ந்து நிற்றலும் — பிரிவு, பிறிவு என ஒன்றி நிற்றலும் ஆகிய இன்னோரன்ன திரிபு களையும் மரூக்களையும் மாற்றங்களையும் ஓர்ந்து சொல்லின் கண் அமைந்தொளிரும் பொருளைத் தேர்ந்துணர்தல் தமிழ்மரபாகும் என்ற இவ்வளவோடு பாயிரத்தை முடித்துக்கொண்டு தமிழ் இலக்கணத்துள் காணப் பெறும் குறியீட்டுச் சொற்களுள் தலையாய சிலவற்றையும் இன்றியமையாத சிலவற்றையும் பற்றி இனி ஆய்ந்து மகிழ்வோம்.

— தொடரும்

தமிழ் வாழ்க

கலைமகள் விழா

நமது கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலைமகள் விழா இவ் யாண்டு 24—10—74 ஆம் நாள் நம் சங்கத் தலைவரும் நகர் மன்றத் தலைவருமான திருவாளர் S. பெத்தண்ணன் அவர்கள் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் டாக்டர் வ சுப மாணிக்கம் அவர்கள் சிறப்புரை வழங்கச் சங்கக் கல்வி நிலையை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளோடு மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

இறை வணக்கத்திற்குப் பின் நம் சங்கக் கல்வி நிலையங்களின் தொடர்பாளர் திரு S சுந்தரம் B. A., B. L., அவர்கள் அனைவரையும் வரவேற்று விழாவைத் தொடக்கி வைத்தார்கள். விழாத் தலைவர் அவர்கள் தம் முன்னுரையில் சங்கம் மரபாக புரிந்து வரும் இவ் விழா மற்றைய பண்டிகைகள் போன்றதன்று. கல்வியின் சிறப்பையும் அதனைப் பெற வேண்டிய இன்றியமையாமையையும் தெய்வ உணர்வோடு உணர்த்துவதேயாகும். என விரித்துக் கூறினார்கள்.

தொல்காப்பிய நயம் என்ற பொருள் பற்றிச் சிறப்புரை வாற்றிய திரு வ சுப மாணிக்கம் அவர்கள் கலைமகள் விழா தமிழர் விழாவே எனக் கூறி "காலம் உலகம்" என்னும் தொல்காப்பிய நூற்பாவில் வரும் 'சொல்' என்பது நாமகளாகிய தெய்வமேயாம் என விளக்கித் தொல்காப்பியம் நமது பண்பாட்டிற்கும் மொழிக்கும் அரணாக விளங்கும் தலையாய நூலென்றும் வறட்டுச் சட்டம் போலன்றி மிக நுண்மையான இலக்கிய—அணி நயங்களைப் பெற்றுக் கற்போர்க்கு சுவையளிப்பதாகும் என்றும் கூறித் "தந்தையர் ஒப்பர் மக்கள் என்றதனால்"— "வருவிசைப் புனலைக் கற் சிறை போல ஒருவன் தாங்கிய பெருமை" அந்தரத்தெழுதிய எழுத்தினமான வந்த குற்றம் வழிகெட ஒழுகல் முதலான பல சான்றுகளைக் காட்டி நகைச் சுவை கமழப் பேசி மகிழ்வித்தார்கள் பின்னர் நம் சங்கச் செயலாளர் திரு. வே. சுப்பிரமணியம் பி. ஏ., அவர்கள் நன்றி நவிலச் சொற்பொழிவு நிகழ்ச்சி இனிது நிறைவேறியது.

பின்னர் திறந்தவெளியில் அமைந்த நாடக அரங்கில் இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளிச் சிறுவர் சிறுமியர் ஆடலும் பாடலும் நிகழ்த்தினர் — பின்னர் உமாமகேசுவர உயர் நிலைப்பள்ளி மாணவர்களும் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்களும் முறையே "தளவாய் விசுவநாதன்" "காணிக்கை" என்ற வரலாற்று நாடகங்களை நிகழ்த்த விழாச் சிறப்பாக நிறைவுற்றது.